2005 ஏப்ரல் 13]

ரெங்கநாதபுரம் ஆகிய பகுதிகளிலே, மிக அதிகமாக உள்ள கால்நடைகளினுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு புதிதாக பகுதி நேரக் கால்நடைக் கிளை நிலையத்தை ரெங்கநாதபுரத்திலே தொடங்க முன்வருவாரா, ஆவன செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு, ரெங்கநாதபுரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, அவருடைய ஊருக்கு மட்டுமல்ல, மற்ற மாமன்ற உறுப்பினர்களும் கேட்டுள்ளவாறு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டுள்ளவாறு, அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும், அம்மா அவர்களுடைய அனுமதியின் பேரிலும், நிச்சயமாக கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்க, இந்த நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 342, திரு. ராதாரவி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

342—

பயிற்சிப் பள்ளி

***31515—திரு. ராதாரவி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை குதிரை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சி செய்வதற்காக கிண்டி பூங்காவைப் பயன்படுத்தியதை வன இலாகாவினர் தடை செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 ஏப்ரல் 13

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம் 1972–க்கு எதிராக உள்ளதால், அரசால் அனுமதி அளிக்க இயலாது.

திரு. ராதாரவி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளி என்பது, ஜவஹர்லால் நேரு அவர்களால் 14–4–1959–ல் திறக்கப்பட்டது. முதலில் Guindy Park Reserve Forest ஆக இருந்தபோதும், பிறகு, Guindy Park, National Park under Wild Life Protection Act ஆக ஆனபோதும், ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேலாக இது நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, 1976 ஆம் ஆண்டு தடை செய்தார்கள். 1983 ஆம் ஆண்டில் G.O. போட்டு உத்தரவு தந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் உத்தரவுதர அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தேசிய பூங்கா, சரணாலயம் போன்ற பகுதிகளில் எந்தவிதமான நடவடிக்கையும் இருக்கக் கூடாது என்று தீர்ப்புக் கூறியிருக்கின்றது. அதன்படி, இங்கே இதற்கு அனுமதி கொடுக்க இயலாது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி, நீங்கள் குதிரை ஓட்டுவீர்களா? (சிரிப்பு)

திரு. ராதாரவி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளியானது மாணவர்களுக்கு மட்டுமல்ல—குதிரை சவாரி கற்றுக் கொடுக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல—Chennai Mounted Police Branch–ஐ சேர்ந்தவர்களுக்கு Dressage, Jumps போன்ற நல்ல Training–ஐக் கொடுக்கக்கூடிய பயிற்சிப் பள்ளி இது. அதனால், உச்ச நீதிமன்றத்தில் இப்படி ஒரு தடையைப் போட்டிருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அணுகி, பரிசீலித்து, நல்ல முடிவினைச் சொல்வார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு என்னுடைய நன்றியைத்

2005 ஏப்ரல் 13]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்கிணங்க இதுபோன்ற வனப் பகுதிகளை இன்று பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இது, புதிதாக யாராவது ஒரு வனப் பகுதிக்கு உள்ளே புகுந்து, ஒரு ஆக்கிரமிப்பைச் செய்து, அதைப் பயன்படுத்துவார் என்று சொன்னால்தான், அப்படிப்பட்ட உத்தரவுகள் அமலுக்கு வருமேயொழிய, ஏற்கெனவே, தீர்ப்பு வருவதற்குப் பல்லாண்டு காலத்திற்கு முன்பேயிருந்து அது பழக்கத்திற்கு வந்து, அந்த இடத்திலே பயிற்சிகள் நடந்திருக்குமேயானால், அதை எந்த உச்ச நீதிமன்றமும் தடுப்பதில்லை. சொல்லப்போனால், அந்த வாகனங்களிலேயிருந்து ஏதாவது புகை போன்றவையெல்லாம் வந்து, மாசு ஏற்படுத்துமேயானால், அது வனத்தைப் பாதிக்கும். ஆனால், குதிரை எந்த மாசையும், அந்த இடத்தில் உற்பத்தி செய்யப் போவதில்லை. அது கெடுக்கப்போவதுமில்லை. அது, வனத்திற்கு இன்னும் கொஞ்சம் அழகூட்டுமே தவிர, அது வனத்தை எந்தவகையிலும் கெடுக்காது என்கிற காரணத்தினாலே, அமைச்சரே, இந்தத் துறையின்மூலமாக, அதற்கான அனுமதியை வழங்கலாம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அதற்கு ஒரு தடையாக இல்லவே இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதைப் பரிசீலித்து மீண்டும் இந்தப் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு, அந்த இடத்தில் குதிரை ஓட்டுகின்ற பயிற்சியை நடத்துவதற்குத் தொடர்ந்து அனுமதியை அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரை சவாரி செய்வதால், அங்கே இருக்கின்ற விலங்குகள், உணவு உண்ணும் நேரத்தில், பாதிப்புக்குள்ளாகின்றன. மேலும், நோய்கள் ஏற்படுவதற்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், உச்ச நீதிமன்றமானது, சரணாலயம், தேசிய பூங்காக்களில், ஒரு புல் பூண்டை பிடுங்குவதற்குக்கூட அனுமதி கொடுப்பதற்கு இப்போது தயாராக இல்லை. கடுமையான ஆணையைப்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிறப்பித்திருக்கிறது. அதனால், உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெறவேண்டும். அதற்குத்தான், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சட்டத்திற்குட்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் இந்தப் பயிற்சிக்கு அனுமதி கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 343, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

343—

கலைக் கல்லூரி

***10450—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில், அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில், கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. எம்.எஸ். சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 35 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கே வசிக்கின்றார்கள். இந்த மாவட்டத்தில் சுமார் 240 மேல்நிலைப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின்மூலமாக, ஆண்டுதோறும், பிளஸ் டூ படிக்கின்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கையில், சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் தேர்வில் கலந்துகொள்கிறார்கள். சுமார் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தேர்வு பெறுகின்றார்கள். அவ்வாறு தேர்வு பெறுகின்றவர்களில் மாணவர்களின் எண்ணிக்கை மாத்திரம், 14 ஆயிரத்திற்கு மேற்பட்டு இருக்கிறது. இந்தத் தேர்ச்சி பெற்ற 14 ஆயிரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY